1972 ஏப்ரல் 6]

Koilpatti Water Supply Schemes

*892 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether the Tamil Nadu Water Supply and Drainage Board has purchased large quantities of Hume steel specials for the Kovilpatti Water Supply Scheme, during 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) மதுரை, தமிழ்நாடு நீர் வழங்கல்-வடிகால் வாரியத்தின் செயலாக்கப் பிரிவின் மேற்பார்வைப் பொறியாளர், 1971 டிசம்பரில் கோவில்பட்டி நீர் வழங்கு திட்டத்திற்குத் தேவைப்படும் ஹியூம் சிறப்பு உருக்குகளை வழங்குவதற்காக சென்னை, திருவாளர்கள் இந்தியன் ஹியூம் குழாய்கள் கம்பெனிக்கு பணி ஆணைகளை அனுப்பியுள்ளார். இக் குழாய்களின் மொத்த மதிப்பு ரூ. 2,33,300.

மாலைநேரக் கல்லூரிகளில் பயிலும் அரிசன மாணவர்கள்

* 893 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாலைநேரக் கல்லூரியில் படிக்கும் பின்தங்கிய வகுப்பினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆகியவர்களுக்கு Tuition Fees-ல் சலுகை காட்டப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்

*** 894 வினா— திரு. வீ. கார்த்தீசன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாவது சம்பள கமிஷன் சிபாரிசின் பேரில் ஓய்வு பெற்ற என்.ஜி.ஓ.-க்களுக்குக் கொடுக்கப்பட்ட ஓய்வு ஊதிய உயர்வு, ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். 1-6-1970 அன்ருே அல்லது அதற்குப் பிறகோ ஓய்வு பெற்று அந்தக் கல்வி ஆண்டு 1970-71 முழுவதும் வேலை செய்த ஆசிரியர்களுக்கு இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்படி மற்ற என்.ஜி.ஓ.-க்களைப் போல எல்லா ஓய்வு ஊதிய உயர்வும் அளிக்கப்பட்டுள்ளன.

1-6-1970-க்கும் 1-10-1970-க்கும் இடையில் ஓய்வு பெற்றவர்கள் இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்துள்ள உயர்தர சம்பளம் தவிர மற்ற எல்லாவிதமான ஓய்வு ஊதிய உயர்வும், இதர சலுகைகளும் அளிக்கப் பட்டுள்ளனர்.

DR. H. V. HANDE : Sir, may I know whether the minimum pension which was increased to Rs. 40 per month to other persons will be applicable to the teachers also? If so, whether that will be given retrospective effect? May I know all the details?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பென்ஷன் தொகையை ரூ. 30-லிருந்து ரூ. 40 ஆக உயர்த்தியிருக்கிருேம். அது எல்லாப் பணியாளர்களுக்கும் பொருந்தும்.

ஆசிரியரல்லாத இதர ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

* 895 வினு—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத இதர ஊழியர்களுக்கும் ஓய்வு கால ஊதியமளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடமுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

Ambattur Township Washermen Association.

* 896 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether any representation has been made to the Government by Ambattur Township Washermen Association during the last year for allotment of place to erect a statue of Mr. M. Ethirajulu, Ex. M.L.C., and leader of that Community in Tamil Nadu; and

(*b*) if so, the action Government has taken in this regard?